**2026 மார்ச் மாதம் 26– ஆம் தேதி வியாழக்கிழமை**

**கூடுதல் மாவட்ட விரைவு நீதிமன்றம், தேனி**

**S.C. நெம்பர் : 32/2021**

| | | | |
|---|---|---|---|
| S.C. No: 32/2021 | பெயர்: கங்காதேவி<br>க/பெ.ராஜேந்திரன் | PW5 | 26.03.2026 |

(1, 2, 4, 9 எதிரிகள் ஆஜர், மற்ற எதிரிகள் ஆஜரில்லை, பிரிவு 355 BNSS –ன்படி மனுத்தாக்கல் செய்யப்பட்டு, மனு அனுமதிக்கப்பட்டது)

**சாட்சி Crl.M.P. 4556/2022 மனு 17.11.2022ம் தேதி அனுமதிக்கப்பட்டதின்பேரில் அழைக்கப்பட்டு 1, 2, 9 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:–**

1. நான் ஏற்கனவே நீதிமன்றத்தில் சாட்சியம் அளித்துள்ளேன் என்றால் சரிதான். என்னை இரண்டு முறை போலீசார் விசாரித்தார்கள் என்றால் சரிதான். நான் பிரேதத்தை சென்று பார்த்தப்போது, இடது கால், இடது கை, தலை இல்லாமல் எலும்புக்கூடு அழுகிய நிலையில் இருந்தது என்றால் சரிதான். என்னை ஆண்டிபட்டி நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் விசாரித்தார்கள் என்றால் சரிதான். ஆண்டிபட்டி நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் என்னை விசாரித்தப்போது நான் கால், கை இருந்தது, மண்டை ஓடு அழுகிய நிலையில் இருந்தது என்று கூறியுள்ளேன் என்றால் சரிதான்.

2. செல்லப்பாண்டி இறந்த விபரம் போலீசார் சொல்லி தெரியும் என்றால் சரிதான். 1, 2, 9 எதிரிகளை தவிர மற்ற எதிரிகளை என்னால் அடையாளம் காட்ட முடியும் என்றால் காட்ட முடியும். போலீசார் சொல்லி தெரியும் என்றால் சரிதான். போலீசார் எதிரிகளின் பெயர்களை சொல்லி தெரிந்து கொண்ட பின் ஆண்டிபட்டி நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் வாக்குமூலம் கொடுத்தேன் என்றால் சரிதான். 1வது எதிரி மஹாராஜன், 2வது தெய்வேந்திரன், 9வது எதிரி சித்ராவை ஏற்கனவே தெரியும் என்றால் சரிதான்.

3. மற்ற எதிரிகளை பனந்தோப்பில் பார்த்த பிறகு சாட்சியம் அளிக்கும்போது நீதிமன்றத்தில் பார்த்தேன் என்றால் சரிதான். ஒவ்வொரு எதிரிகளின் அங்க அடையாளம், உடல்வாகு, நிறம், வயது போன்ற விபரங்கள் எனக்கு தெரியாது என்றால் சரிதான். போலீசார் சொல்லி எதிரிகளை நான் அடையாளம் காட்டினேன் என்றால் சரியல்ல, தினேஷ் இன்று நீதிமன்றத்தில் ஆஜரில் உள்ளார். இறந்த செல்லப்பாண்டி என்னுடன் பிறந்த தம்பி என்றால் சரிதான். காணாமல் போய்விட்டதாக எப்போது புகார் கொடுத்தோம் என்றால் 21.02.2020ம் தேதி 9வது எதிரி சித்ரா வீட்டில் சென்று கேட்டோம், 23.02.2020ம் தேதி புகார் கொடுத்தோம்.

4. செல்லப்பாண்டி காணாமல் போய்விட்டார் என்று அக்கம் பக்கத்தில் சொன்னேனா என்றால் சொன்னேன். செல்லப்பாண்டி அடிக்கடி கேரளாவிற்கு வேலைக்கு சென்றுவருவார் என்றால் சரிதான். பிரேதம் கிடந்த இடம் கடலிலிருந்து எவ்வளவு தூரம் தள்ளி இருந்தது என்றால் 1 மைல் தூரம் இருக்கும். எனது தம்பி இறந்த விபரம் போலீசார் சொல்லி தெரியும் என்றால் சரிதான். எனது தம்பி எப்படி இறந்துப்போனார் என்ற விபரத்தை போலீசார் சொல்லி தெரிந்து கொண்டோம் என்றால் சரிதான். எனது தம்பி செல்லப்பாண்டிக்கு ஊரில் நிறைய எதிரிகள் உள்ளார்கள் என்றால் சரியல்ல.

5. செல்லப்பாண்டி பெண்களை மானப்பங்கப்படுத்தியதாக ஆண்டிபட்டி நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் வழக்கு நிலுவையில் உள்ளன என்றால் சரியல்ல. எனது தம்பிக்கு நிறைய எதிரிகள் உள்ளார்கள் என்றால் சரியல்ல. நான் சென்று பார்த்த பிரேதம் செல்லப்பாண்டியின் பிரேதம் இல்லை என்றால் சரியல்ல. நீதிமன்றத்தில் முதல் விசாரணையில் சொன்ன சாட்சியம் போலீசார் மற்றும் எனது அண்ணன் ராமராஜ் சொல்லிக்கொடுத்து சொன்னேன் என்றால் சரியல்ல. காவல்நிலையம் சென்றேனா என்றால் புகார் கொடுக்க சென்றேன்.

யாரால் புகார் கொடுக்கப்பட்டது என்றால் எனது பெரிய தம்பி ராமராஜ் என்பவரால் கொடுக்கப்பட்டது. நான் சாட்சி கையொப்பம் செய்தேனா என்றால் இல்லை.

6. புகார் கொடுக்க காவல்நிலையத்திற்கு செல்லும்போது ஆண்நபர்கள் எத்தனை நபர்கள் போனார்கள் என்றால் 7 முதல் 10 இருக்கும். அந்த ஆண்நபர்கள் சாட்சி கையொப்பம் செய்தார்களா என்றால் நான் பார்க்கவில்லை, கேட்டால் தான் தெரியும். நான் சொல்வதுபோல் சம்பவம் நடக்கவில்லை என்றாலும், சித்ராவும் செல்லப்பாண்டியும் சந்தோஷமாக வாழ்ந்து வந்தார்கள் என்றாலும், அவர்களுக்குள் எந்த பிரச்சனையும் இல்லை என்றாலும், போலீசார் மற்றும் ராமராஜ் சொல்லிக்கொடுத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**3 முதல் 8 வரையிலான எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

7. 1, 2, 9 எதிரிகளின் தரப்பு குறுக்கு விசாரணையை அப்படியே 3 முதல் 8 எதிரிகள் தரப்பினரால் ஏற்றுக்கொள்ளப்படுகிறது.

**நீதிமன்ற கேள்வி**

8. என்னிடம் காட்டப்படும் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். அது நான் ஆண்டிபட்டி நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் கொடுத்த வாக்குமூலமாகும். அது **அ.சா.ஆ.6** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

**மறுவிசாரணை** – இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் இன்று 26.03.2026 ம் தேதியன்று சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.

G SREE DEVI
Digitally signed by G SREE DEVI
Date: 2026.03.26 16:19:58 +0530

கூடுதல் மாவட்ட நீதிபதி, தேனி.
26.03.2026